**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலன்– கை, கால் பாதிக்கப்பட்ட / செவித்திறன் குறையுடைய / பார்வையற்ற மாற்றுத் திறனாளிகள் – மருத்துவ ஆய்வுக்கூட தொழில்நுட்ப பட்டயப்பயிற்சி மற்றும் கணினி பயிற்சி அளித்தல்– 2014–15 ஆம் நிதியாண்டிற்கு திட்டத் தொடராணை மற்றும் ரூ.6,16,800/– நிதி ஒப்பளிப்பு வழங்குவது– ஆணை– வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல (மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(நிலை) எண்.19 நாள்:03–03–2015

ஜய, மாசி 19,
திருவள்ளுவர் ஆண்டு 2046

படிக்க:–

1. அரசாணை(நிலை) எண்.08, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 06–02–2013.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் ந.க.எண்.4193/ இவாததி–1/13, நாள் 25.8.14 மற்றும் 12.1.2015.

--------

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், 2012–2013–ஆம் ஆண்டிற்கு 22 மாற்றுத் திறனாளிகளுக்கு 12 மாவட்டங்களில் மருத்துவக் கல்வித் துறை மூலம் ‘‘மருத்துவ ஆய்வுக் கூட தொழில்நுட்பப் பயிற்சி’’யினை இரண்டு ஆண்டுகளுக்கு அளிக்கவும், 332 கை, கால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறாளிகளுக்கு அனைத்து மாவட்டங்களிலும் தொழிற்கல்வி இயக்ககத்தின் மூலம் மூன்று மாத கால ‘‘கைபேசி சரிபார்ப்புப் பயிற்சி’’ அளிக்கவும், மற்றும் 10 பார்வைத் திறன் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு பூவிருந்தவல்லி, சென்னை–56ல் உள்ள மண்டல மையம், பார்வையற்றோருக்கான தேசிய நிறுவனத்தில் கணினி பயிற்சி அளித்திட முறையே, ரூ.3,78,400/–, ரூ.12,94,800/–, ரூ.68,000/– என மொத்தம் ரூ.17,41,200/– நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதங்களில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், தற்போது கை, கால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் கைபேசி சரிபார்ப்பு பயிற்சிக்கு, மாற்றுத் திறனாளிகளிடையே, போதிய வரவேற்பு இன்மையால், அப்பயிற்சியினைத் தவிர்த்து, கை, கால் பாதிக்கப்பட்ட / செவித்திறன் குறையுடைய / பார்வையற்ற மாற்றுத் திறனாளிகளுக்கு மருத்துவ ஆய்வுக்கூட தொழில்நுட்ப பட்டயப் பயிற்சி மற்றும் கணினி பயிற்சி வழங்கும் திட்டத்தினை, 2014–2015 ஆம் நிதியாண்டில் தொடர, திட்டத் தொடராணையும், மற்றும் இத்திட்டத்தின் கீழ், பயிற்சியாளர்களுக்கு வழங்கப்படும் ஊக்கத் தொகையினை வழங்கி, இத்திட்டத்திற்கென செலவினத் தொகையாக மொத்தம் ரூ.11,46,000/– நிதி ஒப்பளிப்பு வழங்குமாறு அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேற்காணும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்று, பின்வருமாறு ஆணையிடுகிறது:–

i. கைபேசி சரிபார்ப்பு பயிற்சியினைத் தவிர்த்து, கை, கால் பாதிக்கப்பட்ட / செவித்திறன் குறையுடைய / பார்வையற்ற மாற்றுத் திறனாளிகளுக்கு மருத்துவ ஆய்வுக்கூட தொழில்நுட்ப பட்டயப் பயிற்சி மற்றும் கணினி பயிற்சி வழங்கும் திட்டத்தினை, 2014–2015 ஆம் நிதியாண்டில் தொடர, திட்டத் தொடராணையும், மற்றும் சென்னை, செங்கற்பட்டு, வேலூர், சேலம், கோயம்புத்தூர், தஞ்சாவூர், திருச்சி, மதுரை, தேனி, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி ஆகிய 12 மாவட்டங்களில் தலா இரண்டு நபர்கள் வீதம் 24 பயனாளிகளுக்கு மருத்துவ கல்வித் துறை மூலம் மருத்துவ ஆய்வுக்கூட தொழில்நுட்ப பயிற்சி வழங்கத் தேவையான பயிற்சிக் கட்டணம் மற்றும் ஊக்கத் தொகையாக ரூ.4,12,800/–ம் மற்றும் காஞ்சிபுரம், வேலூர் மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்கள் மூலமாக மாவட்டத்திற்கு 10 நபர்கள் வீதம் 30 மாணவர்களுக்கு மண்டல மையம், பார்வையற்றோருக்கான தேசிய நிறுவனம் (NIVH) மூலம் கணினி பயிற்சி வழங்கத் தேவையான பயிற்சிக் கட்டணம் மற்றும் ஊக்கத் தொகையாக ரூ.2,04,000/–ம் ஆக மொத்தம் ரூ.6,16,800/– (ரூபாய் ஆறு இலட்சத்து பதினாராயிரத்து எட்டு நூறு மட்டும்) பின்வருமாறு நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது: –

**<u>1. மருத்துவ ஆய்வுக்கூட தொழில்நுட்ப பயிற்சி:-</u>**

| | | |
|---|---|---|
| 1. | ஒரு பயிற்சியாளருக்கு இரண்டாண்டிற்கு ஆகும் பயிற்சித் தொகை | ரூ. 10,000/– |
| 2. | இரண்டாண்டிற்கு 24 பயிற்சியாளருக்கு ஆகும் பயிற்சிக் கட்டணம் (ரூ.10,000/–x 24) | ரூ.2,40,000/– |
| 3. | ஒரு பயிற்சியாளருக்கு மாதம் ஒன்றுக்கு பயிற்சி உதவித் தொகை | ரூ. 300/– |
| 4. | இரண்டாண்டிற்கு 24 பயிற்சியாளர்களுக்கான பயிற்சி உதவித் தொகை<br>ரூ.300/– x 24பயிற்சியாளர்கள் x 24 மாதங்கள் | ரூ.1,72,800/– |
| 5. | இரண்டாண்டிற்கு 24பயிற்சியாளர்களுக்கு ஆகும் மொத்த தொகை (ரூ.1,72,800/– + ரூ. 2,40,000/–) | ரூ.4,12,800/– |

**<u>2. கணினி பயிற்சி (பார்வைத்திறன் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு)</u>**

| | | |
|---|---|---|
| 1. | ஒரு பார்வைத்திறன் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு ரூ.5,000/– வீதம் 30 மாற்றுத் திறனாளிகளுக்கு ஆகும் பயிற்சிக் கட்டணம்<br>(30 நபர்கள் x ரூ.5,000/–) | ரூ.1,50,000/– |
| 2. | பயிற்சி பெறும் ஒரு மாற்றுத் திறனாளிக்கு ஊக்கத் தொகை மாதம் ஒன்றிற்கு ரூ.300/– வீதம் 30 நபர்களுக்கு 6 மாதங்களுக்கு ஆகும் கட்டணம்<br>(ரூ.300/– x 6 மாதங்கள் x 30 நபர்கள்) | ரூ.54,000/– |
| | மொத்தம் | ரூ.2,04,000/– |

| | |
|---|---|
| மொத்தம்– இனம் –(1) | ரூ.4,12, 800 /– |
| இனம்–(2) | ரூ.2,04,000/– |
| மொத்தம் | ரூ.6,16,800/– |

(ரூபாய் ஆறு இலட்சத்து பதினாறாயிரத்து எட்டு நூறு மட்டும்)

ii. மேற்படி தொகையினை, தமிழ்நாடு நிதித் தொகுப்பு–I, விதி எண்.99ன் படி, முன்பணமாக பெற்று உரிய பயனாளிகளுக்கு வழங்கிட, மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

4. மேலே பத்தி –3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

“2235–சமூகப் பாதுகாப்பும் நலனும்–02–சமூக நலன்–101–மாற்றுத் திறனாளிகள் நலன்–I திட்டத்தில் சேராதது–CO– மாற்றுத் திறனாளிகளுக்கான மறுவாழ்வுத் திட்டம் 72– பயிற்சி’’ (த.தொ.கு 2235–02–101–CO-7206)

5. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண்.10935/நிதி(சந)/2015, நாள் 23.02.2015 இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி )

பொ. சிவசங்கரன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.
தலைமைக் கணக்காயர், சென்னை–18.
தலைமைக் கணக்காயர், சென்னை–18. (பெயரில்)
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் (பெயரில்) (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)

**நகல்:-**
தொழில் கல்வி இயக்ககம், சென்னை–25.
இயக்குநர், மருத்துவக் கல்வி இயக்ககம், கீழ்ப்பாக்கம்,சென்னை–10.
பார்வையற்றோர் / ஊனமுற்றோருக்கான தேசிய நிறுவனம், பூவிருந்தவல்லி, சென்னை–56.
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நல த் துறை, சென்னை–9.
நிதி (சமூக நலம்) துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு/ உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.